Secondary Grade Graduate Teachers

* 173 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Secondary Grade Graduate Teachers required by the Office of the Chief Educational Officer of North Arcot district, during 1973–74; and

(b) among them, the number of teachers appointed?

இடைநிலை பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகத்தில் 1973–74 ஆம் கல்வி ஆண்டிற்காக, தேவையான பட்டதாரி செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இதில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) பட்டதாரி ஆசிரியர்கள் 106, இடைநிலை ஆசிரியர்கள் 112.

(இ) பட்டதாரி ஆசிரியர்கள் 106, இடைநிலை ஆசிரியர்கள் 112.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இதுபோன்று தேவையான ஆசிரியர்களை கல்வி இலாகா வருட ஆரம்பத்தில் நியமனம் செய்யாமல் கல்வி ஆண்டு முடியும் தருவாயில் நியமனம் செய்யும் நோக்கம் என்ன? கடந்த ஆண்டு இந்த மாதிரி நிலை அந்த மாவட்டத்தில் ஏற்பட்டதுபற்றி அரசு அறியுமா? இது குறித்து அரசு மேலும் விரைவான நடவடிக்கை எடுக்க அறிவுரை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது பற்றிய விவரககுறிப்புகள் இல்லை. என் காலத் தாழ்வு ஏற்பட்டது என்பதுபற்றிய விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வியினைக் கொடுத்தால் அதுபற்றிச் சொல்ல முடியும்.

(Thiru K. S. Ganapathi rose.—)

MR. CHAIRMAN: The Hon. Minister has already requested that a separate question may be put. What is the supplementary question that the hon. Member Thiru Ganapathi is going to ask?

THIRU K. S. GANAPATHI: Sir, as a matter of fact, I have something to convey. If the Hon. Chairman permits me, I will do it.

1975 மார்ச் 24]

MR. CHAIRMAN : Is the hon. Member going to read out any passage?

THIRU K. S. GANAPATHI : Sir, I am going to convey the present position.

MR. CHAIRMAN : Yes, all right.

திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு திங்கள் முதல் நாள் என்ன நிலைமை இருக்கின்றதோ அதைப் பொறுத்துத்தான் இது போன்று ஆசிரியர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. இப்படி ஆகஸ்டு முதல் நாள் உள்ள நிலை பற்றி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், உதாரணமாக 1974–75-ஐ எடுத்துக் கொண்டால், 1975 ஜனவரித் திங்களில் தான் இந்த ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பிறகு அதிகாரிகள் நியமனம் செய்வதற்கான நடவடிக்கையில் இறங்குகின்றார்கள். இந்த ஆண்டிலே இதுவரையில் நியமனம் செய்யப்படாமலேயே இருக்கின்றது. பள்ளியே முடிவடையக்கூடிய நிலையில் இனிதான் நியமனம் செய்வது என்பது பயனற்றதாக ஆகிவிடுகின்றது. எனவே, இப்படிப்பட்ட காலத்தாழ்வு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு இனி என்ன செய்ய இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதுதான் சப்ளிமெண்டரியா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றி ஆராய்ந்து எந்த அளவிற்குக் காலத்தாழ்வு ஏற்படாமல் தடுக்கலாம் என்று முடிவெடுக்க அரசு முயற்சிக்கும். ஆகஸ்டுக்கு முன்பு எவ்வளவு பேர் இருக்கின்றார்கள், இன்னும் எவ்வளவு பேர் தேவை என்ற எண்ணிக்கைகளையெல்லாம் பார்க்க வேண்டியிருப்பதால் காலத் தாழ்வு ஏற்படுகிறது. காலத்தாழ்வு ஏற்படக் கூடாதுதான். ஏன் இது ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து இப்படிப்பட்ட காலத் தாழ்வு ஏற்படாதிருக்க என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமோ அத்தகைய முயற்சிகளைக் கையாளத்தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு முயற்சிக்கும்.

Contingent Staff of Aided High Schools

* 174 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Contingent Staff of Aided High Schools are not governed by any leave rules and that they are expected to avail leave only on loss of pay ; and

(*b*) if so, whether the Government will extend the benefit of the leave rules applicable to the non-teaching staff of the Aided High Schools, to them also?